**அம்பகமுவ பிரதேச சபை - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பகமுவ பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்பகமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மஸ்கெலியா உப அலுவலகத்தின் வாகனங்களுக்கு எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக மஸ்கெலியா கூட்டுறவுச் சங்கத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 125,000 ஆன முற்பணத்தை மஸ்கெலியா பிரதேச சபைக்கு கையளிக்காமல் சபையின் முற்கொடுப்பனவு மற்றும் முற்பணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டின் அறிக்கைகளிலும் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த சிக்கல்களை தீர்வு செய்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அலுவலக உபகரணக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 529,912 ஆன மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்திற்கு பங்களிப்புக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அப்பெறுமதி திரட்டிய நிதியத்திற்கு சீராக்கம் செய்த காரணத்தினால் திரண்ட நிதி ரூபா 529,912 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவொன்றை பயன்படுத்தி சீராக்கம் செய்கின்றேன் | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய மற்றும் முன்னைய ஆண்டு களுக்குரிய கணக்காய்வு கட்டணங்களுக்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டின் போது கணக்காய்வு கட்டணங்களை கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.2. இனங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கு விடயமொன்றில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி உள்ளடக்கப்பட்ட மொத்தம் ரூபா மற்றும் அண்மித்த அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 529,912 வேறுபாடு இருந்தது. | நாட்குறிப்பு பதிவொன்றை பயன்படுத்தி சீராக்கம் செய்கின்றேன் | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கு விடயமொன்றுக்குரிய ரூபா 11,750,472 கூட்டுத்தொகையான கணக்கு மீதிகள் அட்டவணைகள் இல்லாமை காரணமாக கணக்காய்வின் போது மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | அபிவிருத்தி செயற் திட்டங்களுக்குரிய கடன்பட்டோர் / கடன் கொடுத்தோர் மீதிகளுக்கு இடையே பெருமளவு மீள்நிரப்பாமை மற்றும் போலியான மீதிகள் காண்பிக்கப்பட்டமை அடிப்படையில் இந்நிலைமை உருவாகியிருந்தது. | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,943,635 ஆக இருந்ததுடன், அதற்கு அண்மித்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,748,348 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டின் சனவரி 01 இல் ரூபா 1,373,201 ஆன நிலுவையில் ஆண்டில் ரூபா 574,938 ஆக இருந்தது. | மேலும் நிலுவையாக காணப்படும் பெறுமதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| i | வாடகை வருமானமாக ரூபா 6,540,000 ஆன மதிப்பிடப்பட்ட போதும் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 3,047,450 அதாவது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 46 சதவீதமாக இருந்தது. சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1,903,376 ஆக இருந்தது. | காணப்படும் கொரோனா தொற்று நிலைமையில் 2020 இல் வருமான சேகரிப்பு குறைவடைந்த போதும் 2021 ஆம் ஆண்டில் நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக நடமாடும் சேவைகள் நடாத்தப்படும். | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | 2020 சனவரி 01 இல் உள்ளவாறு வாடகை மற்றும் கட்டணங்களில் (கேள்வி) இருந்து ரூபா 763,214 தொகை அறவிடப்பட வேண்டிய போதும் அதில் ரூபா 15,000 அறவிடப்பட்டிருந்தது. | காணப்படும் கொரோனா தொற்று நிலைமையில் 2020 இல் வருமான சேகரிப்பு குறைவடைந்த போதும் 2021 ஆம் ஆண்டில் நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக நடமாடும் சேவைகள் நடாத்தப்படும். | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 முகாமைதத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1995 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை வெவ்வேறு ஆட்களுக்கும் நிறுவனங் களுக்கும் 199 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 3,470,980 ஆன முற்பணங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாதிருந்ததுடன் 2021 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை மேலும் ரூபா 1,834,888 ஆன 192 முற்பணங்கள் தீர்வு செய்யப்பட வேண்டியிருந்தது. | முற்பணத்தை தீர்வு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தாமதமின்றி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 26,009,720 ஆன கடன்பட்டோரிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோரிடமிருந்து பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தாமதமின்றி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்திட்டங்கள் செயற்பாடுகள் அல்லது மூலதன வேலை தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் அபிவிருத்தி முன்மொழிவுகளுக்காக ரூபா 78,043,000 ஆன நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் செய்த வேலைகளின் பெறுமதி ரூபா 8,313,130 ஆக மாத்திரம் இருந்தமையால் செயன்முன்னேற்றம் 11 சதவீதமாக இருந்தது. 2020 திசெம்பர் 11 ஆந் திகதி வரையில் ஒரு செயற்திட்டத்தின் வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த துடன் 75 சதவீதத்திற்கு மேற்பட்ட பௌதீக முன்னேற்றத்தை 07 செயற்திட்டங்களே பெற்றிருந்தன. 27 செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதத்திற்கு குறைந்த அளவில் காணப்பட்டதுடன் 10 சதவீதத்திற்கு குறைந்த பௌதீக முன்னேற்றத்துடன் 10 வேலைகள் ˙ காணப்பட்டன. | காணப்படும் கொரோனா தொற்று நிலைமையில் உரிய வகையில் கடமைகளை நிறைவேற்ற முடியாததன் பேரில் அபிவிருத்தி முன்மொழிவு களில் எதிர்பாரத்த வகையில் சகல வேலை களையும் பூர்த்தி செய்வதற்கு முடியா திருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்கின்றேன். | ஆண்டில் கிடைக்கும் மூலதன நிதி ஏற்பாடுகள் மூலம் பொது மக்களுக்கு ஆகக்கூடிய சேவையொன்றை வழங்கும் வகையில் பணியினை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |